செ.வெ.எண்.32 நாள்: 17.10.2019

# பத்திரிக்கைச் செய்தி

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியுள்ள நிலையில் அரியலூர் மாவட்டத்தில் வசிக்கும் பொதுமக்கள் பருவ மழைக்காலங்களில் இடி, மின்னல் காரணமாக ஏற்படும் இழப்புகள் மற்றும் உயிர்சேதங்களை தவிர்ப்பதற்காக செய்யவேண்டியவை மற்றும் செய்யகூடாதவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

**செய்ய வேண்டியவை:** மக்கள் வெளிப்புறங்களில் இருக்கும்போது, அவர்களை மின்னல் தாக்காமலிருப்பதற்கு உடனடியாக பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும். கட்டடங்கள் ஒதுங்கக்கூடிய சிறந்த இடமாகும். கட்டடங்கள் இல்லாத பகுதியாக இருந்தால் அவர்கள் பாதுகாப்பாக குகை, அகழி, அல்லது பள்ளமான பகுதிகளை தேர்வு செய்து ஒதுங்கிட வேண்டும். மரங்கள் ஒதுங்குவதற்கான சிறந்த இடம் அல்ல. ஏனெனில் உயர்ந்த மரங்களை மின்னல் எளிதாக தாக்குவதால், பாதிப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. ஒதுங்குவதற்கான இடங்கள் ஏதுமில்லாதபோது, உயரமான பொருட்களுக்கு அருகில் செல்வதை தவிர்க்க வேண்டும். வெட்ட வெளியில் தனித்த மரங்கள் மட்டுமே உள்ள பகுதியாக இருக்கும் பட்சத்தில், கைகளால் கால்களை இருக்க அணைத்து கால்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளாமல் குனிந்த நிலையில் தரையில் அமர்ந்து கொள்வது பாதுகாப்பானதாகும். மின்சாரம் கடத்தும் பொருட்களிடமிருந்து தள்ளி இருக்க வேண்டும். நெருப்பு இருக்கும் இடங்கள், ரேடியேட்டர்கள், அடுப்பு, உலோக குழாய்கள், தொட்டிகள் மற்றும் தொலைபேசிகள் ஆகியவையும் இவற்றில் அடங்கும். நீரினுள் இருந்தால் அந்நீர்நிலையினை விட்டு வெளியே வந்து விடுதல் சிறந்தது. படகு மற்றும் ஒடம் போன்றவை நீர் நிலைகளில் பயணித்து கொண்டிருந்தால் உடனே கரை திரும்ப வேண்டும். சிறிய அளவு மின்சாரத்தை உணரும் போதோ, உடலில் உள்ள உரோமங்கள் சிலிர்க்கும் போதே, அல்லது உடல் கூச்சம் ஏற்படும்போதோ மின்னல் தாக்குவதற்கான அறிகுறிகளாகும். எனவே அச்சமயம் தரையில் உடனடியாக அமர்ந்திட வேண்டும். மின்னல் என்பது கால்நடைகளையும் அச்சுறுத்தக்கூடிய ஒன்றாக உள்ளது. பொதுவாக கால்நடைகள் மரத்தடியில் இருப்பதால், இடி மற்றும் மின்னல் தாக்கும்போது எளிதாக உயிரிழப்புகள் நிகழ்கின்றன. கால்நடைகளை இடிதாங்கி பொருத்திய பாதுகாப்பான இடத்தில் இருக்கச் செய்வதன் மூலம் மின்னல் தாக்குதலிலிருந்து காப்பற்றலாம்.

**செய்யக்கூடாதவை:** மின்சாரத்தால் இயங்கக்கூடியவையான ஹேர் டிரையர், மின்சார பளுதூக்கிகள் அல்லது மின்சார ரேசர்கள் ஆகியவற்றினை பயன்படுத்தாமல் இருத்தல் வேண்டும். ஏனெனில், மின்னல்கள் வீடுகளை தாக்கும்போது, மேற்கூறிய சாதனங்கள் அவை பயன்படுத்துபவரை எளிதாக தாக்கும். மின்னல் ஏற்படும் போது கைப்பேசி / தொலைப்பேசியினை உபயோகப்படுத்தாமல் இருந்தால் நல்லது. வெட்ட வெளியில் உலோக பொருட்களை மின்னல் ஏற்படும் போது பயன்படுத்தாமல் இருப்பது நல்லது.

**மின்னல் தாக்குதலின் போது கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்:** எல்மோ தீ (சூரியஒளி வெளியேற்றம்) காண நேரிட்டால் இரும்பிலான பொருட்கள், அரிவாள்கள், கத்திகள் ஆகியவற்றை உபயோகப்படுத்துவதை தவிர்த்தல் வேண்டும். தலைக்கு மேல் இரும்புக் கம்பியுடன் கூடிய கொண்ட குடை உபயோகப்படுத்துவதை தவிர்க்க வேண்டும். இதில் ஆபத்து மிக அதிகம். கைகளால் கால்களை இருக்க அணைத்து கால்கள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளாமல் குனிந்த நிலையில் தரையில் அமர்ந்து கொள்வதன் மூலம் மின்னல் தாக்குதலிருந்து தப்பிக்கலாம். வெட்ட வெளியில் உயரமான அரங்களுக்கு அருகில் செல்ல நேரிட்டால் மேலே கூறியபடி தரையில் அமர வேண்டும்.

மேற்கண்ட பாதுகாப்பு முறைகளை பின்பற்றி வடகிழக்கு பருவமழையின்போது ஏற்படக்கூடிய இடிமின்னல் தாக்குதலில் இருந்து பொதுமக்கள் தங்களையும், கால்நடைகளையும் பாதுகாத்து கொள்ளவும், மேலும் பாதிப்பு குறித்து பொதுமக்கள் "1077" என்ற கட்டணமில்**லா** தொலைபேசி எண்ணில் அல்லது மாவட்ட பேரிடர் மேலாண்மை அலுவலக தொலைபேசி 04329 – 228709 எண்ணில் 24 மணி நேரமும் தொடர்பு கொண்டு தகவலை தெரிவிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**